ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்யதர்மம்.

दृशा द्राघीयस्या दरदलितनीलोत्पलरुचा
दवीयांसं दीनं स्नपय कृपया मामपि शिवे ।
अनेनायं धन्यो भवति न च ते हानिरियता
वने वा हर्म्ये वा समकरनिपातो हिमकरः ॥

ஹே சிவே! ஸகலலோகங்களுக்கும்மங்களத்தைக்கொடுக்கும் சக்தி வாய்ந்த ஹே! பரமேசுவரீ அற்பம் மலர்ந்த நீலோத்பல மலரின் காந்திபோன்றகாந்தியையுடையதாயும் விலாசமாயும் விளங்கும் உன்னுடைய நேத்திரத்தால் வெகு தூரத்தி லிருப்பவனும் மிகவும் தீனனுயுமிருக்கும் என்னை இயற்கையாயிருக்கும் கருணையால் நன்கு பார்த்து கருணு ரஸத்தால் ஸ்நாநம் பண்ணினவனுகச் செய்ய வேண்டும். இவ்விதம் செய்தால் இந்த ஜனம் தந்யமாக ஆய்விடும் இவ் விதம் என்னை தன்யநாகச் செய்வதால் உனக்கு யாதொரு குறைவுமில்லை. சந்திரனுனவன் வனங்களிலும் சிறந்த உப் பரிகைகளிலும் வேற்றுமையின்றி ஸமமாகத் தன் கிரணங் களைப் பிரகாசிக்கும்படி செய்யவில்லையா?

ஓர் பக்தன் ஸ்ரீ பராதேவியிடம் ஹே தேவி உலகில்புண்ணிய சாலிகளான பலர் உன்னுடைய கருணுப்பிரவாகம் நிரம்பிய திருஷ்டியால் பார்க்கப்பட்டு கருணுரஸத்தால் நனைக்கப்பட்டு பிறவிப் பிணியைப் போக்கி சிறந்த பதவியைப் பெறுகிருர்கள். உன்னருகில் வருவதற்குற்ற புண்ய கர்மமில்லாதபடியால் வெகு தூரத்திலிருந்து வேறு வழியில்லாமல் கஷ்டப்படும் என்னையும் கருணுப்பிரவாகத்தால் நனைத்து தன்யனுகச் செய்யவேண்டும். சந்திரன் எங்ஙனம் கீழ் மேல் என்கிற பேதத்தை விட்டு சகல விடங்களிலும் தன் கிரணத்தை விழும்படி செய்கிருனே அவ்விதமே நீயும் மிகவும் அற்பனுன என்னைஉ ன்கடாக்ஷத்தால் பார்த்து அனுக்கிரகித்தால் உனக்குயாதொரு குறைவுமில்லை. ஆகையால் நீ அவசியம் என்னை அனுக்கிரகிக்க வேண்டும் என்று பிரார்த்திக் கிருன்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
குரோதன-ஸு ஆடி-மீ ௮௨

வேதாந்தஸாரம்.

(௱௭௨-வது பக்கத்தொடர்ச்சி.)

இதுவரையில் நிரூபிக்கப்பட்ட ஸ்தூல, ஸூக்ஷ்ம காரணப் பிரபஞ்சங்களுக்கும் "ஸமஷ்டியான ஓர் மஹாப்பிரபஞ்சம் இருக்கின்றது. எங்ஙனம் சிறிய வனங்களுக்குப் பெரியதான ஓர் மஹாவனம் ஸமஷ்டியாகின்றதோ, எங்ஙனம் சிறிய ஸமுத்திரங்களுக்கு ஓர் பெரிய ஸமுத்திரமானது ஸமஷ்டியாகின்றதோ அங்ஙனமே இங்குமென்றறிந்து கொள்ளவேண்டும். இத்னால் உபஹிதமான ஸைதன்யமும் வைச்வானரன் முதற்கொண்டு ஈசுவரன் வரையிலுள்ள சைதன்யமும், சிறு வனத்திலுள்ள ஆகாயம்போலும், சிறு ஸமுத்திரத்திலிருக்கும் பிரதிபிம்ப ஆகாசம்போலும் ஒன்றுதான் மஹாப்பிரபஞ்சம், அதனால் உபஹிதமான சைதன்யம் இவ்விரண்டோடும் பழுக்கக்காய்ந்த இரும்புக்குண்டுபோல் வேறாகப் பிரிக்க முடியாமல் ஒன்றாய் விளங்கும் சைதன்யமானது நம்மால் பார்க்கப்படுகிற சகலமான இந்த ஜகத்தும் பிர்மஸ்வரூபம் என்கிற சுருதிவாக்கியத்தில் வாச்யார்த்தமாகின்றது. இவ்விரண்டைக் காட்டிலும் வேறாக இருந்துகொண்டு லக்ஷியார்த்தமாக ஆகின்றது. இவ்விதம் ஒரு வஸ்துவில் அதல்லாதமற்றொன்றை ஆரோபம் செய்வது அத்தியாரோபம்" என்று பொதுவாய்க் காண்பிக்கப்பட்டது. இதுவரையில் ஸாமான்யமாய் அத்பாபரோபத்தை நிரூபித்து இனி விசேஷமாயும் குறிப்பிட்டுக்கூறுகின்றார்.

1. புத்திரனை ஆத்மாவாகக்கூறும் வாதிகள்:—பிரத்தியகாத்மாவினிடத்தில் அவரவர்களுக்குத் தோன்றியவாறு இதுவென்றும், அதுவென்றும் ஆரோபணம் செய்யும் பல மதஸ்தர்களில் சிலரை இங்கு நிரூபித்துக் காட்டுகிறோம். மிகவும் பிராகிருதனை

ஒருவன் "ஆத்மாவே புத்திரன்" என்று சுருதியிருப்பதாலும்,

स्वस्मिन्निव पुत्रेऽपि प्रेमदर्शनात् पुत्रे पुष्टे नष्टे च अहमेव पुष्टः नष्टश्चेत्याद्यनुभवाच्च पुत्र आत्मा इति वदति ॥

தன்னிடத்தில்போல புத்திரனிடமும் சந்தோஷம் ஏற்படுவதாலும், புத்திரனுக்கு ஏதாகிலும் கஷ்டம், நஷ்டம், லாபம், சுகம் முதலியவைகளுண்டானால் தனக்கே அவைகள் வந்துவிட்டனவெனக் கருதி அதிகக்கஷ்டம், சுகம் முதலானவைகளின் அனுபவமிருப்பதினாலும் புத்திரன்தான் ஆத்மா என்று சொல்கிறான்.

இவ்விதம் ஒரு அதிகாரி உண்டென்பதை பரமாசார்யாளும் அறிவிக்கிறார்கள்.

मूढा अश्रुतवेदान्ताः स्वयं पण्डितमानिनः ।
ईशप्रसादरहिताः सद्गुरोश्च बहिर्मुखाः ॥ ५२०.
विवदन्ति प्रकारं तं शृणु वक्ष्यामि सादरम् ।
अत्यन्तपामरः कश्चित् पुत्र आत्मेति मन्यते ॥

ஸ்வயம் புத்தியில்லாதவர்களும் வேதாந்த சாஸ்திரம் என்கிற பெயரைக்கூடக் கேட்டறியாதவர்களும், தம்மைச் சிறந்த பண்டிதர்களாகத் தாமே எண்ணியவர்களும், ஸ்ரீ பரமேசுவரனுடைய பிரஸாதத்தைப் பெறுதவர்களும், மஹான்களான குருக்களிடமும் நெருங்காதவர்களுமான சிலர் மிகவும் ஆதரவுடன் ஒருவருக்கொருவர் விவாதம் செய்துகொள்கிறார்கள். அதை அற்பம் கூறுகின்றேன் கேள். அறிவு என்னும் பதத்தையே அறியாத ஒரு மூடன் தனது புத்திரன்தான் தன்னுடைய ஆத்மா என்று எண்ணுகிறான். இவ்விதம் கருதுவதற்கு அவன் கூறும் காரணமாவது,

आत्मनीव स्वपुत्रेऽपि प्रबलप्रीतिदर्शनात् ।
पुत्रे तु पुष्टे पुष्टोऽहं नष्टे नष्टोऽहमित्यतः ॥ ५२३.
दीपाद्दीपो यथा तद्वत् पितुः पुत्रं प्रजायते ।
पितुर्गुणानां तनये बीजांकुरवदीक्षणात् ॥ ५२४.
अतोऽयं पुत्र आत्मेति मन्यते भ्रान्तिमत्तमः ।

நமது சரீரத்தில் இருக்கும் பிரீதிபோல் புத்திரனிடத்திலும் அதிகப் பிரீதி ஏற்படுகின்றது. புத்திரன் பெருத்திருந்தால் நாம் பருமனாயிருப்பதாகவும், அவன் இளைத்திருந்தால் நாமும் இளைத்திருப்பதாகவும் தோன்றுகிறது. ஒரு தீபத்திலிருந்தும் மற்றொரு தீபம் உண்டாவதுபோல் பிதாவினிடமிருந்து புத்திரன் உண்டாயிருக்கிறான். பிதாவினுடைய குணங்கள்யாவும் வித்திலிருக்கும் குணங்கள் எப்படி அங்குரத்தில் (அதாவது முளையில்) உண்டாகின்றனவோ அவ்விதம் காணப்படுகின்றன. இவ்விதம் பிரத்தியக்ஷ அனுபவமிருப்பதால் புத்திரன்தான் ஆத்மாஎன்று மிகவும் அதிகமான பிராந்தியுடைய முட்டாள் எண்ணுகிறான்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஹிந்துமத தர்மம்.

(௫௯௫-வதுபக்கத்தொடர்ச்சி)

7 பிரகரணம்.

பிராம்மண்யத்தின் நிலைமையைக் குறித்து அதைர்யம் வேண்டாம்.

(1) பிராம்மண்யததிற்கு அநர்த்தகாலம் சம்பவித்துவிட்டதென்று சிலர் சொல்லுவார்கள். அப்படி ஒருநாளும் வரவே மாட்டாது. பிராம்மண்யமானது சாச்வதமாய் ஸம்ரக்ஷிக்கப்பெற்று நிலைநிற்க யோக்கியதையுள்ளதுதானா என்பதை நன்றாயும் கண்டிப்பாயும் நிச்சயம்செய்யும் காலம் நேர்ந்திருப்பதாய் மாத்திரம் சொல்லலாமேயொழிய வேறில்லை.

(2) நமக்குள் நாளடைவில் கலந்துபோயிருக்கும் பதரைத் தூற்றி நல்லது பொல்லாததைத் தனித்தனியாய்ப் பிரித்தெடுக்கும் காலம்வந்திருப்பதாய்ச் சொல்லலாம்.

(3) பிராமணர்கள் அனேகர் பிராம்மண்யத்தை உதாஸீனமாய் விட்டிருப்பினும் பிராம்மண்யமென்பது ஒருகாலும் அழிவையடையாது. அது நிலைநிற்குமென்பதில் சந்தேகமில்லை.

(4) உங்களில் சிலர் வழிதப்பிச் செல்லும் தப்பு அபிப்பிராயமுள்ள ஸோஷல் ரிபார்ம்காரர்கள் சொல்வதைக்கேட்டு அவர்களுடன் சேர்ந்து ஏககோஷம்போட்டு உங்களுடைய புராதன பரம்பரை ஆசாரங்களைக் கைவிட்டு பிராமணத் தன்மைக்கு முரணான பிராமணகிருத்தியங்களைச் செய்தாலும்கூடப் பிராம்மண்யமென்பதை ஒழிக்க அவர்களால் ஒருகாலும் சாயாது.

(5) பிராம்மண்யத்தை ஓர் இடத்தில் சிலர் கைவிட்டாலும் மற்றோரிடத்தில் அது பிழைத்திருந்து கொழித்து நிற்கும். சிலர் வேண்டுமானால் அதிலிருந்து நழுவிக்கொள்ளலாம், அப்படி நழுவிக்கொள்வது ஒரு சாமர்த்தியமல்ல.

(6) முதலாவது உங்களுடைய நிலைமையை யோஜியுங்கள். ஆதிபூர்வகமான வைதிக மதமாகிய உங்களது ஆரியமதமானது புத்தியில் பலதினிசு பக்குவமுள்ள எல்லாஜனங்களையும் கடைத்தேறச் செய்விக்கும் மகிமை வாய்ந்தது. அதில் சொல்லப்பட்ட தர்மங்கள் முக்காலத்திற்கும் அதாவது பூதவர்த்தமான பவிஷயத் சம்பவங்களுக்கும் ஒத்தனவாய் விளங்குகின்றன.

(7) இந்த ஆரியமதமானது சிருஷ்டிகாலம் முதற்கொண்டேயுள்ள புராதனமானது. அந்த மதத்தையே ஆதாரமாய்க்கொண்ட உங்களது நாகரிகமானது இன்று நேற்று வந்ததல்ல. உங்களது வேதத்தை நீங்கள் நம்பும்பக்ஷத்தில் உங்களுடைய மதமும், நாகரிகமும் மனுஷ்யனால் உண்டாக்கப் பட்டவையல்லவென்று உணர்வீர்கள்.

(8) ஆகையினால் என்ன முயற்சிசெய்தாலும் அவைகள் மனுஷ்யனால் அழிக்கப்படக் கூடியவையல்ல. எந்த தேசத்திய சரித்திரமும் உங்களது நாகரிககாலத்திற்குப் பூர்வமானதல்ல என்பதை நீங்கள் மறந்துபோகக்கூடாது.

(9) நீங்கள் பக்ஷபாதமில்லாமல் யோஜித்துப் பார்க்கும் பக்ஷத்தில் உங்களுடையதல்லாத மற்ற அன்னியமதங்களும்,

நாகரிகங்களும் வெகுகாலத்திற்குப் பிறகு உண்டானவைகளென் பதும், குற்றம் குறை சேர்ந்தவைகள் என்பதும், உங்களுடைய தை மாதிரியாகப் பார்த்து நூதனமாய் மனுஷ்யப் பிரயத்தனத் தால் உண்டாக்கிக் கொள்ளப்பட்டவைகளென்பதும் அவைகள் அனுபோகத்திற்குப் பொருந்தாதனவென்பதும், தோன்றும்போ தெல்லாம் அவரவர்களுக்குத் தோன்றினபடி அடிக்கடி மாற்றிக் கொள்ளக் கூடியவைகளென்பதும் உங்களுக்குப் புலப்படும்.

(10) உங்களுடைய தெய்விகமான சநாதநமதத்தையும் அதை ஆதாவாயுடையதார்மிக நாகரிகத்தையும் உங்களுடைய இஷ்டப்பிரகாரமெல்லாம் வேடிக்கைபோல மாற்றிக்கொள்ள உங் களுக்கு சுதந்தரமில்லை. நீங்கள் அவைகளில் பிரவேசித்து மாற் றவும் கூடாது; முடியாது. அப்படிமாற்ற முயற்சிசெய்ய விரும்பு வோர்கள் தங்களை அவைகளினின்றும் விலக்கிக் கொண்டவர்க ளாய் ஆவார்கள்.

(11) உங்களுடைய வைதிக சாஸ்த்ரீயமதமானது உங்களை நன்மார்க்கத்தில் நடத்திவைப்பதாயும் இன்னவிதம் நீங்கள் நடக் கவேண்டுமென்பதை விதிப்பதாயுமிருக்கின்றது. நீங்கள் அதை உங்களிஷ்டத்திற்குத் தக்கப்படி செய்துகொள்ளவோ அல்லது வேறு எவ்விதத்திலாவது பிரவேசித்து மாற்றிக்கொள்ளவோ அதிகாரிகளல்ல நீங்கள் வேண்டுமென்றால் அதைவிட்டு உங்களை விலக்கிக் கொள்ளலாமேயொழிய வேறுவழியில்லை. அப்படி விலக்கிக் கொண்டவர்கள் அதினால்வரும் பலனை அனுபவிக்க வேண்டிவரும்.

(12) அப்படிச் சிலர் தங்களை விலக்கிக்கொண்டு விட்டார் கள். இன்னும் சிலர் விலக்கிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்கள் இன்னும் சிலர் விலக்கிக்கொள்வதாய் பயமுறுத்திக் கொண்டிருக் கிறார்கள். இப்போது அப்படி ஆயத்தமாயிருக்கிறபேர்களை நெ ருங்கி அவர்கள் ஆயாசப்பட்டாலும் பாராட்டாமல் இப்படி அநி யாயமாய் நல்லவழியிலிருந்து நழுவுவதாலுண்டாகும் நஷ்டம்இன் னதென்று அடிக்கடி அவர்கட்கு வற்புறுத்துவதும் அப்படிஹிந்து தர்மத்தைக் கைவிடாமலிருப்பதாலுண்டாகும் லாபம் இவ்வள

வென்று அடிக்கடி எடுத்துரைப்பதும் ஒவ்வொரு உண்மையான ஹிந்துவும் ஆயுள்வரைக்கும் கைப்பிடிக்க வேண்டிய கடமையாகும்.

(13) நம்முடைய கம்பீரமான மதத்தின் குணங்களை முழுதும் நான் எடுத்துரைக்க இப்போது தொடங்கவில்லை. பெரிய ஆரியமதத்தின் விஸ்தாரமான விஷயங்கள் படித்துணர்ந்த ஹிந்து வித்வான்களாகிய உங்களுக்குத்தெரிந்தேயிருக்கும் ஆகிலும் சில முக்கிய அம்சங்களைமட்டும் நான் இப்போது விவரிக்கிறேன். உங்களது ஸநாதன தர்மமானது எல்லாருக்கும் பொருந்தி எக்காலத்திலுமுள்ள சாச்வதமானதால் இந்தமதம் ஒன்றே மனுஷ்யஜன்மத்தின் வாழ்வு மரணம் இவைகளின் உண்மையான கருத்தை உலகத்தோர்யாவரும் அறிந்துகொள்ளும்படி செய்யும் அருமையானமதமாகும். இந்தக்கருத்து இன்னதென்பதைப் பிரத்யேகமாய் விஸ்தரித்து உங்களுக்கு வேறொரு சமயத்தில் எடுத்துரைப்பதாயிருக்கிறேன்.

(14) ஆகையினால் வல்லமையுள்ள பூர்வீகபிர்ம்மரிஷி பரம்பரையைச் சேர்ந்தவர்களாயும், வேதத்தைக் காப்பாற்றிவைத்துக்கொண்டு வருபவர்களாயுமிருக்கும் பிராமணர்களாகிய உங்களுக்கே வேதசாஸ்திரமாகிய தீபத்தால் சகல ஜீவன்களுக்கும் ஆத்மக்ஞானத்தை விளங்கச்செய்து அவர்களை மோக்ஷசாம்பிராஜ்யத்தை அடையச்செய்யும் சிரேஷ்டமான கடமை ஏறபட்டிருக்கிறது.

(15) உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் ஆத்மார்த்தத்தைபற்றிய உன்னதமான பொறுப்பு இப்பேர்ப்பட்டதென்பதை நன்ருய் உணர்வீர்களாக—அதை விட்டுக்கேவலம் மிருகதர்மத்திற்கு நீங்கள் உங்களைத் தாழ்த்திக்கொள்ளாதீர்கள். ஆத்மார்த்தம்ஒழுங்காய்க் கைகூடிற்ருனல் மனுஷ்ய க்ஷேமத்திற்கேற்பட்ட இதாசுகங்களெல்லாம் தனக்குத்தானே கைகூடிவரும்.

(16) அறியாமையாலாவது குரோதத்தினலாவது யார் என்ன எண்ணினலும் எண்ணட்டும். உலகத்தோருக்கு க்ஷேமமுண்டாக்கும் வேதக்ஞானத்தை அடைவிப்பது பிராமணர்களா

கிய உங்களாலேயே ஆகவேண்டிய காரியமென்று அறிவீர்களாக பிராம்மண்யத்தைக் காப்பாற்றும் விஷயத்தில் பிராமணர்களாகிய உங்களுக்கு இப்போது நல்லசமயம் நேர்ந்திருப்பதாய்ச் சொல்ல லாம். ஆனாலும் உங்களுடைய ஸ்வயநலத்தை உத்தேசித்தே அப்படிச்சொல்லலாமேயொழிய மானிடகுலத்தின்மீது இரக்கசம் பந்தமாய் அப்படிச் சொல்லக்கூடாது. உங்களுக்கு இது நல்ல சமயமென்பது எப்படியெனில் மற்றவர்களின் தர்மநலத்தையும், அபிவிருத்தியையும் பொறுத்து நீங்கள் பொறுப்புடன் ஆலோச னைகள் செய்யுங்கடமையானது உங்களுடைய சொந்த தர்மானுஷ் டான மார்க்கத்திற்கு இடைஞ்சலாய் நிற்கவில்லை. ஏனென்றால் மேற்சொன்ன மற்றவர்கள் முக்கியமாய் இத்தேசத்தின் தென் பாகத்திலுள்ளவர்களில் அனேகர் நீங்கள் அவர்கள்பொருட்டு தலையிட்டு உதவிசெய்வதை அவர்கள் அபேக்ஷிக்கவில்லை. பிராம ணரல்லாத ஹிந்துக்களுடைய கிரககிருத்திய சம்பந்தமான மதச் சடங்குகளில் அதிலும் முக்கியமாய் அவர்களில் இறந்துபோன பந்துக்களின் மறு ஜன்ம க்ஷேமத்திற்காக நீங்கள் தொல்லை யுடன் நடத்திவைக்கவேண்டிய கஷ்டமான கடமையின் சுமை யை உங்களிடமிருந்து பிராமணரல்லாத ஹிந்துக்கள் சன்னம் சன்னமாய் இறக்கிவருகிறார்கள். ஜீவன் போனபிறகு அவர்க ளுடைய அப்படிப்பட்ட நிர்ப்பாக்கிய பந்துக்கள் அடையும் கதியைப்பற்றி என்னவானாலும் போகட்டும். சாஸ்திரம் அறிந் தவர்களுக்கு அவர்கள் கதி எப்படியாகுமென்பதில் சந்தேக மில்லை. இது தெரிந்த ஒவ்வொரு உண்மையான ஹிந்துவும் மிகவும் விசனமாய் உணராமலிரான். இப்படியெல்லாம் இருந் தும் மீதியிருக்கும் ஒவ்வொரு பிராமணரல்லாத ஹிந்துவும் தர்ம நடவடிக்கைகளில்தான் மாறுதல் செய்து விட்டதின் அதாவது மீறிவிட்டதின் பலன்களைப் பற்றி தான் முழுதிருப்தியாய் உண ருகிறதாய்ப் பாசாங்கு மட்டும் செய்துவருகிறான். அவன் உங்க ளுடைய புரோஹிதர்கள், பஞ்சங்கக்காரர்களில் அனேகரிடத்தில் அவர்களுக்கு மரியாதை காட்ட அல்லது மெச்சத்தகுந்த யோக் கியதாம்சம் ஒன்றுமில்லையென்று எண்ணியிருக்கிறதுமல்லாமல், மரித்த ஜீவன்களை மறுலோகத்தில் நற்கதியடைவிக்கும்

பொருட்டுச் சுத்தமான பிராமணரல்லாத ஒரு பக்தபரதேசிக்குச் சடங்குக்குக் கொடுக்கும் தானபதார்த்தங்களைக் கொடுத்துவிடுவது நியாயமான செய்கைபோல் நினைத்துக்கொண்டிருக்கிறான். தான் அப்படி நினைத்துக்கொண்டிருப்பதற்கு ஆதாரம் ஏதாவது இருக்கிறதா இல்லையாஎன்ற விஷயத்தில்மட்டும் அவன் புத்தியை செலுத்தவில்லை. இப்பேர்ப்பட்ட விஷயங்கள் தன்னுடைய இஷ்டத்தைப் பொறுத்தவையல்ல. இந்த உலகத்தைத்தவிர வேறே உலகங்கள் இருக்கின்றனவென்பதை எந்த சாஸ்திரங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனவோ அந்தசாஸ்திரங்கள்மட்டுமே அப்படிப்பட்ட உலகங்களுக்கு இங்கிருந்து போகிறவர்களுக்கு உதவி செய்ய இங்கிருக்கும் மனிதன் கைக்கொள்ளவேண்டிய சரியான வழிகளும், சாதனங்களும் இன்னின்னவைகளென்று அதிகாரத்துடன் விதிக்கக்கூடும். சாஸ்திரமானது அப்பேர்ப்பட்ட விஷயங்களுக்குச் சில குறிப்பான நிபந்தனைகளை விதித்திருக்கின்றது. அவைகளில் முக்கியமானது அக்னியில் ஆகுதிசெய்வதினால் என்பதுவேயாகும். அக்னிக்கு அபிமானதேவதையாகிய அக்னிதேவன் யாருக்குஉத்தேசிக்கப்பட்டதோ அவனிடத்தில்தகுந்தரூபத்தோடு அந்த ஆகுதியைக்கொண்டுபோய்ச் சேர்ப்பான். பரிசுத்தமான நெருப்பானது த்விஜனுக்கு எப்படி அக்னியோ அப்படிப் போலவே சூத்திரனுக்கு அக்னியானது பிராமணன் வலதுகையே ஆகுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதுபற்றியே சூத்திரன் வேதப்பிரகாரம் நேராய் அக்னியில் ஆகுதிசெய்யக்கூடாது. ஆகுதிசெய்வதானது ஏற்ற வேதமந்திர உச்சாரணையோடுகூடச் செய்யவேண்டியதாயிருக்கிறது. அப்படிப்பட்ட வேதமந்திர உச்சாரணம் த்விஜனுக்குமாத்திரமே உரியது.

(தொடரும்)

ராவ்ஸாஹேப் எல். ஏ. ரேங்கஸாமி அய்யர்.

தெய்வங்கள்.

(௱கஅ-ம் பக்கத்தொடர்ச்சி)

3-வது குரு.

एकाक्षरप्रदातारमाचार्यमपमन्यते ।
श्वानयोनिशतं प्राप्य चण्डालः कोटिजन्मसु ॥

என்றபடி ஒருஅக்ஷரத்தை உபதேசித்த குருவானலும்—உபாத்தியாயானலும்—அன்னவரைத் தெய்வமாகக்கருதி பூஜிக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் அன்னவரை அவமதிப்பனேல் அவன் நூறுஜன்மா நாயாகவும், கோடிஜன்மா சண்டாளனுகவும் பிறந்து உழலவேண்டும் எனப்பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

தத்தமது ஆசாரியரிடம் பக்தியிருந்தால்தான் அன்னவரிடம் கற்கும் வித்தை பயன்படும். ஆச்சாரியபக்தியொன்றினல் மட்டும் ஒருவன் அதிமேதாவியாகிவிடலாம். குருபக்தியில்லாத வித்தை சாம்பலிற்செய்த ஆகுதிபோல் பயனற்றதாகிவிடும்.

"குருவில்லாதவித்தை பாழ்" என்ற நீதிவாக்கியம் இவ்விடம் கவனிக்கற்பாலது.

நமது பரமாசாரியாளாகிய ஸ்ரீ சங்கரபகவத்பாதர், ஸ்ரீகாசியில் தனது சிஷ்யர்களுடன் இருக்கும்பொழுது அச்சிஷ்யர்களில் பத்மபாதர் குருசுச்ரூஷைகளைச் செய்வதில் மிகுந்த ஆசையுள்ளவராய் குருவின் குறிப்பு அறிந்து நடப்பவராய் குருவிடம் அபரிமிதமான பக்தியை செலுத்திவந்தார்.

மற்ற சிஷர்கள் வித்தைகற்பதில் அதிக சிரத்தையுள்ளவர்களாயிருந்ததுடன், பத்மபாதரை கல்விகற்காதவரெனக் கொஞ்சம் தாழ்மையாக நினைத்துவந்தனர்.

இதையறிந்த நம் பரமாசாரியாள் பத்மபாதரின் குருபக்தியை மற்றவர்கள் அறிந்துகொள்ளும்பொருட்டு, ஒருநாள் தமது சீடர்களுடன் கங்கைக்கரைக்குச் சென்றார். அச்சமயம் கங்கை

யின் மற்றொருகரையிலிருந்த பத்மபாதரை நம் பரமாசாரியாள் கூப்பிட்டார். குருவினிடம் அதிதீவ்ரபக்திவாய்ந்த பத்மபாதர் "குருவே துணை" என்பதாகச் சொல்லிக்கொண்டு கங்கையில் இறங்கிவந்தார். அவரது குருபக்தியைக்கண்ட கங்காதேவி அவர் மூழ்கிவிடாவண்ணம் அவரதுபாதங்களை தாமரைப் புஷ்பங்கள் கொண்டு தாங்கி கரைசேர்த்தாள். அதிலிருந்துதான் அவருக்குப் பத்மபாதர் எனக்காரணப் பெயர் உண்டாயிற்று.

உடனே நம் குருநாதன் பத்மபாதருக்கு ஸகல கலைகளும் தானே தோன்றுமாறு அனுக்கிரகம் செய்தருளினார்.

இவ்வுலகில் ஆதிகுருகடாக்ஷம்பெற்ற ஒருவன் அடையக் கூடாதபேறும் உண்டோ?

ஏகலைவ்யன் என்ற வேடன் தான்கொண்டிருந்த குருபக்தியினால் தனது குருவின் (துரோணாசாரியின்) பிரதிபிம்பமாகிய சிலையினிடமிருந்து எவரும் அறியாததும் அர்ஜுனன் ஒருவனே அறிந்ததுமாகிய அநேகம்அரியவித்தைகளை கற்றுக்கொண்டான். அதாவது—

ஒருநாள் ஏகலவ்யன்என்ற அவ்வேடன் துரோணாசாரியரையடைந்து தனக்கு வில்வித்தை கற்றுக்கொடுக்கும்படி வேண்டிக்கொண்டான். அதற்குதுரோணாசாரியார்தான்க்ஷத்திரியர்களுக்கு வில்வித்தைசொல்லிக்கொடுத்துவருவதால்தனக்கு அவகாசமில்லையென்று கூறிவிட்டார். வேறு எவரிடத்திலும் வித்தைகற்க மனமற்றவனான அவ்வேகலைவ்யன்மறுபடியும் அடிபணிந்து மன்றாடி வேண்டிக்கொண்டனன்.

துரோணர் அவனது வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. அதனால் மனதுடைந்தவனான அவ்வேடன் ஒருயோசனை செய்தான். அதாவது—

துரோணாசாரியாரைப் போல் ஒரு சிலைசெய்து அச்சிலையை குருவாகவே பாவித்து வணங்கி அதனிடமிருந்து வித்தைகற்பது என்பதே—உடனே அவ்விதமே செய்து அவனிருந்த வனத்தில் ஆசிரமம் ஒன்று நிர்மாணித்து அவ்வாசிரமத்தில் தனது குருவா

கிய துரோணவிக்கிரகத்தை ஸ்தாபித்து அதனிடமிருந்து வித்தை
கற்று வ்ரலாயினன். சிலை எங்காவது வித்தைகற்றுக்கொடுக்குமா?

சிலை வித்தையைக் கற்றுக்கொடுக்கவில்லை. அவ்வேடனது
அதிகமான குருபக்திதான் வித்தையைக்கற்றுக்கொடுத்துவந்தது.
வேடனும் பூராவாக அஸ்திரவித்தையைக் கற்றுணர்ந்தான்.

“எழுத்தறிவித்தவன் இறைவனாகும்” என்ற நீதிவாக்கியத்
தைக் கடைபிடித்து அதன்படி தன் குருவாகிய துரோணவிக்கிர
கத்தைதெய்வமாகக்கருதிப் பூஜித்துவந்தான்.

ஒருநாள் அர்ஜுனனது வேட்டைநாயானது அவ்வனத்தில்
வர அதன்மீது ஒருஅம்பை எய்தான் ஏகலைவ்யன். அவ்வடியைப்
பெற்ற அந்நாய் அர்ஜுனனிடம் ஓடிவந்தது. அதைக்கண்ணுற்ற
அர்ஜுனன் அதிசயமிகக்கொண்டான். (என்?) அவ்விதம் அம்பு
விட தனக்கும் தனது குரு துரோணாசாரியாருக்கும் மட்டும்
தெரியும். மற்ற எவருமறியார்கள் என்பது அர்ஜுனனுடைய
உறுதி.

உடனே அந்நாயின்பின் அர்ஜுனன் சென்றான். அவ்வேட
னைக்கண்டான். “உன் குரு யார்?” எனக்கேட்டான். அதற்கு
அவ்வேடன் “என் குரு துரோணாசாரியாராவர்” எனக் கூறினன்.
அர்ஜுனன் மிகக்கோபங்கொண்டு தன் குருவிடம் சென்று,
பாதம்பணிந்தான். ஸ்வாமீ தாங்கள் இவ்வுலகில் உன்னையும் என்
னையுந்தவிர மற்ற எவரும் அறியாத ஒருரகஸ்ய அஸ்திரவித்தை
யை உனக்குக் கற்பித்திருக்கிறேன்” என்று கூறினீர்கள். அவ்வித்
தையை ஒரு எளியவேடனுக்கும் கற்பித்திருக்கின்றீர்கள். இது
நியாயமா?” வெனக்கேட்டனன்.

அதைக்கேட்ட துரோணர் மனந்திடுக்கிட்டார். “அப்பா
அர்ஜுனா! அவ்விதம் நான் யாருக்கும் கற்பிக்கவில்லையே”
என்றார் அர்ஜுனன் தனது நாயை துரோணருக்குக் காண்பித்து
நடந்த விஷயங்களையும் கூறினன்.

உடனே துரோணர் அர்ஜுனனுடன் புறப்பட்டு அவ்வேட
னையணுகினார். குருவைக்கண்டவேடன் ஓடோடியும்வந்து பாதம்

பணிந்து வந்தனவழிபாடுகளைச் செய்தான். நடந்தவிஷயங்களை யும் தான் வில்வித்தை கற்ற விபரத்தையும் கூறினன்.

துரோணர் குருதக்ஷிணை கேட்டனர். வேடன் "தாங்கள் எதைக்கேட்டாலும் கொடுக்கக்காத்திருக்கிறேன்" என்றனன். துரோணர் அவனது குருபக்தியை அர்ஜுனனுக்குத் தெரியச்செய் வதற்காக அவ்வேடனது வலக்கை கட்டைவிரலைக் கேட்டனர்.

வேடனும் மறுமொழி புகலாமல் தன் வலக்கை கட்டை விரலை துணித்து குருவின் பாதத்தில் வைத்தான். அடடா! அவ் வேடனது பக்தியேபக்தி எனமெச்சிக்கொண்டனன் அர்ச்சுனன்.

गुरवे सर्वलोकानां भिषजे भवरोगिणाम् ।
निधये सर्वविद्यानां दक्षिणामूर्तये नमः ॥

என்றபடி ஸர்வ ஜகத்திற்கும்—ஸகலாண்டங்களுக்கும் பரமகுரு வாகியும், உலகங்களிலுள்ள ஸமஸ்த குருக்களுக்கும்—ஆசாரி யார்களுக்கும்—குருவாகியும்-ஆசாரியராகியும் விளங்கும் ஸ்ரீ தக்ஷி ணாமூர்த்தியென நாமத்தையுடைய ஸ்ரீ சிவசங்கரர் பூலோகத்திற் கென தானே சங்கரரென திருநாமங்கொண்டு அவதரித்து தமது பக்தகோடிகள் உஜ்ஜீவிக்கும்பொருட்டு அத்வைதமதத்தை ஸ்தா பித்து தமது சிஷ்ய குழாங்களுக்கு அனுக்கிரகித்து விளங்கிவந் தார். அப்பெரியாரின் வழியில் வந்த ஒவ்வொருவரும் அநேகம் அற்புதங்களைச் செய்து வந்தனர். தற்காலம் விளங்கிவரும் ஸ்ரீ ஸ்வாமிகள் ஆதிபகவத்பாதாளின் பூர்ண அவதாரமென்றே சொல்லவேண்டும். ஆகையால் ஒவ்வொருவரும் தத்தமது குரு வையும், ஜகத்திற்கே பரமகுருவாகிய ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடா திபதி ஸ்ரீ சங்கரகுருவையும் அடிபணிந்து அவர்களின் பூர்ண அனுக்கிரகத்தை பெற்று வாழ்வோமாக.

4-வது தெய்வம்.

"உலகெலாந்தனதின்னருட்கொடுபுரந்தே
உத்தமர்நெஞ்சகத்தொளிரும்
பலகலைநவின்றபழையனுங்குழகன்

பரசினர்க்கருள்புரிந்தாங்காங்
கிலகுபன்மதத்தோரெவ்வவாறிறைஞ்சி
யேத்தினுமவரவர்துதிகொண்
டலகிலவ்வாறேயருள்குருபரன்ற
னடிமலர்முடிமிசையணிவாம்.

நித்தியமாய்நிர்மலமாய்நிட்களமாய்
நிராமயமாய்நிறைவாய்நீங்காச்
சுத்தமுமாய்த்தூரமுமாய்ச்சமீபமுமாய்த்
துரியநிறைசுடராயெல்லாம்
வைத்திருந்ததாரகமாயானந்த
மயமாகிமனவாக்கெட்டாச்
சித்துருவாய்நின்றவொன்றைச்சுகாரம்பப்
பெருவெளியைச்சிந்தைசெய்வாம்''

என்றபடி அண்டபிண்ட சராசரங்களையெல்லாம் படைத்துக் காத்து சம்ஹரிக்கும் பரம்பொருளை யென்றும்--கனவிலும்—மறவாமல் நினைத்து பக்திசெய்து வழிபடுவோமாக. பரமாத்மாவின் பிரபாவத்தை வர்ணித்தல் என்பது நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்ப்பதை யொக்கும். நாம் தினந்தோறும் மதா,பிதா,குரு,தெய்வங்களை முறையே பூஜித்து அவர்களிடம் அன்பு—பக்தியைச் செலுத்தி அவர்களது ஆசியையும் அனுக்கிரகத்தையும்பெற்று கிருதார்த்தர்களாவோமாக. சுபம்.

மாந்தை, சா. கிருஷ்ணய்யன்.

வேதக்கல்வியின் அபிவிருத்தி.

ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் மடம் ஏஜெண்டு பின் வருமாறு எழுதுகிறார்:—

கிரகஸ்தர்கள் தங்கள் கடமைகளைச சரிவர நடத்துவதற்கு வேதத்தைச் சரியாக அறிவது அவசியமாகும். தற்போதய புரோகிதர்களின் கல்வியறிவும் திருப்திகரமாக இல்லை. பணம் அதிக

மாக வராததும் எஜமானர்களுடைய அசிரத்தையும் இதன் காரணமாகும். ஒவ்வொருவரும் அவருடைய சக்திக்குத் தகுந்தபடி முக்கியபாகங்களையாவது வாசிப்பதற்கு வழியில்லாவிட்டால் தேசமே ஒருக்கால் இந்தபொக்கிஷத்தை இழக்கநேரிடலாம். ஒவ்வொருவரும் வேதபாராயணத்தை ஆதரிக்க வேண்டும். தென் இந்தியாவில் வேதபாராயணம் தனியான சிறப்பையுடையது.

வேதங்களையும், அவற்றைச்சேர்ந்த ஸூத்ரங்களையும் படிப்பதை ஆதரிக்கும் பொருட்டு கும்பகோணம், காஞ்சீ காமகோடி பீடம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரியஸ்வாமிகள் வருஷாவருஷம் நிரந்தரமாக ஒரு பரீக்ஷை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கீழே கண்டவை பாடமாக இருக்கும். வருஷாவருஷம் அத்வைத சபை நடக்கும் சமயத்தில் இந்த பரீக்ஷையும் கும்பகோணத்திலாவது அல்லது ஸ்ரீ ஸ்வாமிகள் கூறும் வேறு இடத்திலாவது நடைபெறும். முதல் வகுப்பில் தேறுகிறவர்கள் "தர்மக்ஞ" என்ற பட்டம் பெறுவார்கள். ஒரு தங்க மோதிரத்தில் பட்டம் எழுதியும் ஒரு சால்வையும் சன்மானிக்கப்படும். மற்றவர்கள் கிரமப்படி மரியாதை பெறுவார்கள். பாக்கி விவரங்களுக்கு ஸ்ரீ மடம் ஏஜெண்டிற்கு எழுதலாம். ஸ்மார்த்தர்களும் வைஷ்ணவர்களும் மாத்வர்களும் பரீக்ஷைக்கு வரலாம்.

பரீட்சை விபரம்.

இவைகளில் ஏதாவது ஒன்று

1. ருக்ஸம்ஹிதை
2. தைத்திரீய யஜுஸ்ஸம்ஹிதை பிராம்மாணத்தோடு
3. சுக்லயஜுஸ்ஸம்ஹிதை
4. ஸாமவேத ஸம்ஹிதை தலவகாரசாகை, ஸாமவேத கௌதும சாகை. ப்ரக்ருதி ஊஹரகஸ்யம் முடிய.

பாஷ்யத்தோடும் அந்தந்த க்ருஹ்யத்தின் பிரயோகமும்.

1. ஆச்வலாயன க்ருஹ்ய ஸூத்ரம்
2. ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்
3. போதாயன க்ருஹ்ய ஸூத்ரம்
4. பாரத்வாஜ க்ருஹ்ய ஸூத்ரம்
5. ஸத்தியாஷாட க்ருஹ்ய ஸூத்ரம்
6. வைகானஸ க்ருஹ்யஸூத்ரம்

7. அக்னிவேச க்ருஹ்ய ஸூத்ரம்
8. ஜைமினி க்ருஹ்ய ஸூத்ரம்
9. காதிர க்ருஹ்ய ஸூத்ரம்

இவைகளில் ஏதாவது ஒன்று பாஷ்யத்தோடும் அந்தந்த க்ருஹ்யத்தின் பிரயோகமும்.

வைத்தியநாத தீக்ஷிதீயம் ஆசௌசகாண்டமும் சிராத்த காண்டமும் அல்லது நிர்ணய ஸிந்து.

தன்தன் வேதத்தில் இஷ்டப்படி 10 மந்திரங்கள் பாஷ்யத்தை அனுஸரித்து அர்த்தம் சொல்லப்படவேண்டும்.

அந்தந்த சாகைக்கு ஏற்பட்ட ஓர் உபநிஷத். கௌதம தர்ம ஸூத்ரம் வியாக்கியானத்தோடு.

ரஸ மஞ்சரி.

நீரருந்துவதனுல் நுண்ணிய மதியுண்டாம்.

இந்தியாவில் ஜாதிபேதம் பாராமல் வர்ண ஸங்கரம் வலுக்கச்செய்தால் "இப்பொழுதுள்ள மனிதர்களைப்பார்க்கினும் சிறந்த புத்திமான்களுண்டாவார்" என்று சிலமேதாவிகள் கூறுகின்றனரல்லவா! அவர்களைக்குறித்து 'ஹிதவாதீ' என்ற வங்காளப்பத்ரிகை தெரிவிக்கின்ற அபிப்பிராயத்தை "பர்ட்வான்—ஸம்ஸ்கிருதபாரதீ" பின்வருமாறு எழுதுகின்றது:—

"ஜாதிக்கலப்பினுல் ஆராய்ச்சி சக்தி அதிகம்பெற்ற மனிதர்களைப் பெறக்கூடும்" என்று அமெரிக்க நிபுணர்கள் கருதுகின்றனர். அந்த அபிப்ராயம் விசாரணைக்கு முன்நிற்காது. ஏனெனின் அதிகமான சுத்தஜலத்தைப் பானஞ்செய்வதனுல்தான் மூளையில் "விசேஷ பாவனுசக்தியும் கல்பநாசக்தியும்—சிந்தாசக்தியும்" விளைகின்றது. சரியானவயது வந்தவர்கள் தினந்தோறும் $2\frac{1}{2}$ சேர் ஜலம் பருகவேண்டும் ஆனுல், அவர்கள் அருந்துகின்ற தின்பண்டங்களுடன் இயற்கையாகவே $1\frac{1}{4}$ சேர் தண்ணீர் உள்ளேசென்றுவிடுவதால் தனி ஜலமாக $1\frac{1}{4}$ சேர் உட்கொள்ளுவதே போதுமானது இவ்விதஞ் செய்தால் அஜீரணரோகம் எளிதில் நீங்குகின்றது உடம்பின் கொதிப்பு அடங்குகின்றது; உடலும் புஷ்டியடைகின்றது.

ஸ்ரீ ஜாநகீஜாநி:.